# கம்பம் நகராட்சி

2022–ஆம் ஆண்டு மார்ச் மாதம் (31.03.2022) ஆம் நாள் வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு, கம்பம் நகர்மன்ற கூட்ட அரங்கில் நகர்மன்றத்தலைவர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்ட பொருள்கள்

**1.** நகராட்சி ஆணையாளர் அவர்களின் 02/2022 மற்றும் 03/2022– ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– மன்றம் பதிவு செய்யலாம்.

**2.** நகராட்சி பொறியாளர் அவர்களின் 02/2022 மற்றும் 03/2022– ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– மன்றம் பதிவு செய்யலாம்.

**3.** கம்பம் நகராட்சியில் 2021–2022–ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு–செலவுத்திட்டம் மற்றும் 2022–2023–ஆம் ஆண்டிற்கான உத்தேச வரவு–செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1261/2017/பி2)

**4.** இந்நகராட்சிக்கு அரசாணை எண். (Ms) No.138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.27.12.2021, சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.20543/2021/பி2 நாள் 29.12.2021ன் படி, கீழ்கண்ட பணிகள் செய்திட 02.03.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | கம்பம் நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தையினை நவீன கட்டமைப்பு வசதிகளுடன் மேம்பாட்டு பணிகள் செய்தல். (Ward No.A, Block No.4, T.S.No. 40,41) | 775.00 |

மேற்கண்ட பணிக்கு 02.03.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வலைதளம் வழியாக (Online) ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை. மேலும், நேரடியாக (Offline) இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, தொழில்நுட்ப பட்டியல் மட்டும் (Technical Bid) 02.03.2022 அன்று திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொழில்நுட்பதகுதிகள் ஆய்வு செய்யப்பட்டதில் கீழ்குறிப்பிட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் திட்டப் பணிமேற்கொள்ள தகுதியான ஒப்பந்தப்புள்ளியாக இருந்தது. தொழில்நுட்ப தகுதி வாய்ந்த ஒப்பந்நதாரர்களின் விலை குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி நமுனா (PriceBid) 09.03.2022 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கேட்கப்பட்ட விலைவிகிதம் விவரம் கீழ்கண்டவாறு,

| வ. ண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திருவாளர்கள் ஏ.பி. கன்ஸ்ட்ரக்ஸன்ஸ் கம்பம் | மதிப்பீட்டு தொகைக்கு (+) 4.97 % அதிகம் |
| 2 | திரு. ஆர்.சபீர்அலி, கம்பம் | மதிப்பீட்டு தொகைக்கு (+) 5.40 % அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 4.97% சதவிகிதம் கூடுதலாக வழங்கிய திருவாளர்கள் ஏ.பி.கன்ஸ்ட்ரக்ஸன்ஸ் கம்பம் ஒப்பந்ததாரரிடமிருந்து விலைக்குறைப்பு செய்ய கோரியதில், ஒப்பந்ததாரர் மூலப்பொருட்களின் விலை ஏற்றத்தினாலும் பணியாளர்களின் கூடுதல் சம்பள ஏற்றத்தினாலும் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள 4.97% சதவிகித விலை விகிதத்தினை குறைக்க இயலாது என 11.03.2022ஆம் தேதியில் கடிதம் வழங்கியுள்ளார். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளும் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது

அலுவலகக் குறிப்பு:– வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட கூடுதலாக வரப்பெற்றுள்ளது. இத்திட்டப்பணியின் அவசியம் கருதியும், மீளவும் ஒப்பந்தப்புள்ளி கோரும்பட்சம் விளம்பரசெலவினம் மற்றும் காலதாமதம் ஏற்படும் என்பதால் 4.97% சதவிகிதம் கூடுதலில் குறைவாக வழங்கியுள்ள திருவாளர்கள் ஏ.பி.கன்ஸ்ட்ரக்ஸன்ஸ் கம்பம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்காலம். (ந.க.எண்.2130/2021/இ1)

**5.** இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு எண். TN 60 X 0499 வாகனம் கொரேனா தொற்று பணிக்கு பயன்படுத்தப்பட்டு வந்தது. இவ்வாகனம் 2020–ஆம் ஆண்டில் மராமத்து பணிகள் செய்து இரண்டு வருடங்களாகி விட்டபடியால், மராமத்து பணிகள் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.98,000/–க்கு (ரூபாய் தொண்ணூற்று எட்டாயிரம் மட்டும் ) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- மன்றம்அனுமதிக்கலாம். (ந.க.எண்.573/2022/எச்1)

**6.** இந்நகராட்சி பொதுமக்களின் அத்தியாவசிய குடிநீர் விநியோகத்திற்கு 2022–2023 ம் ஆண்டிற்கான வருடாடந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டிற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வரிசை எண் | பணிகள் விபரம் | உத்தேச மதிப்பீட்டு தெகை (ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | நகரில் 1 முதல் 17 வார்டுகளிலும் உள்ள குடிநீர் பகிர்மான குழாய்களில் ஏற்படும் உடைப்புகள் மற்றும் கசிவுகள், குடிநீர் விநியோக வால்வுகளில் ஏற்படும் பழுதுகள் அகியவற்றை உரிய பொருட்களுடன் வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்க்கொள்தல். | 9.80 |
| 2 | நகரில் 18 முதல் 33 வார்டுகளிலும் உள்ள குடிநீர் பகிர்மான குழாய்களில் ஏற்படும் உடைப்புகள் மற்றும் கசிவுகள், குடிநீர் விநியோக வால்வுகளில் ஏற்படும் பழுதுகள் அகியவற்றை உரிய பொருட்களுடன் வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 9.80 |

| | | |
|---|---|---|
| 3 | நகரில் 1 முதல் 17 வார்டுகளிலும் பொதுமக்களின் தண்ணீர் தேவைக்காக நிறுவப்பட்ட சிறு மின் விசைமோட்டார்கள் மற்றும் பொதுகழிப்பறைகள் இதர பயன்பாடுகளுக்குரிய மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உரிய பொருட்களுடன் வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல். | 9.60 |
| 4 | நகரில் 18 முதல் 33 வரை உள்ள வார்டுகளில் பொதுமக்களின் தண்ணீர் தேவைக்காக நிறுவப்பட்ட சிறு மின் விசைமோட்டார்கள் மற்றும் பொதுகழிப்பறைகள் மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உரிய பொருட்களுன் வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல். | 9.60 |
| 5 | லோயர்கேம்ப் மற்றும் சுருளிப்பட்டி நீரேற்று நிலையங்களில் குடிநீர் விநியோகத்திற்கு தேவையான கேஸ் குளோரினேசன்சிலிண்டர் வாங்குதல். | 6.70 |
| 6 | லோயர்கேம்ப் மற்றும் சுருளிப்பட்டி நீரேற்று நிலையங்களில் குடிநீர் விநியோகத்திற்கு பொருத்தப்பட்ட கேஸ் குளோரினேசன் பிளான்ட்டில் ஏற்படும் பழுதுகளை வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்தல் | 5.70 |
| 7 | லோயர்கேம்ப் நீரேற்று நிலையத்தில் உள்ள இரண்டு 75 குதிரை திறன்மின் மோட்டார்கள், மற்றும் சுருளிப்பட்டி நீரேற்று நிலையத்தில் 10எச்.பி., 30 எச்.பி., 60 எச்.பி., என 8 மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உரிய பொருட்களுடன் வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்தல். | 6.50 |
| 8 | நகரில் 33 வார்டுகளிலும் உள்ள அடிபம்புகளில் ஏற்படும் பழுதுகளை வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளதல் | 1.00 |

அலுவலகக்குறிப்பு– 1) மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினத்தை 2022–2023ம் ஆண்டு குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.626/2022/இ2)

**7.** இந்நகராட்சியில் 33 வார்டுகளிலும் உள்ள தெருவிளக்குகளை பராமரிக்க பயன்படும் ஹைறட்ராலிக் ஈப்பு வாகனம் TN 60 T 7497 க்கு, தகுதி சான்றுக்கான காலம் 28.12.2021 ம் தேதியுடன் முடிவடைந்ததால், தற்போது மேற்படி வாகனத்திற்கு தகுதி சான்று பெற உரிய மராமத்து பணிகள் மேற்கொள்ளவும், வாகன காப்பீட்டு கட்டணம் செலுத்தவும் கீழ்கண்டவாறு செலவினங்களுக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வரிசை எண் | பணிகள் விபரம் | செலவினத்தொகை ரூ. |
|---|---|---|
| 1 | ஈப்பு வாகன பராமரிப்பு பணிகள் | 35000.00 |
| 2 | வாகன காப்பீட்டு கட்டணம் | 19457.00 |

அலுவலகக்குறிப்பு– 1) மன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்படி பணிக்கான செலவினத்தினை 2022–2023–ஆம் ஆண்டு பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.636 /2022/இ2)

**8.** இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள கணினி செயல்பாடுகளுக்கான தடையில்லா மின்வழங்கிக்கு உரிய மின்கலப்பெட்டி செயல் இழந்ததால், மின் தடை ஆகும் நேரத்தில் கணினிகள் இயங்காமல், அலுவலக பணிகளில் தடை ஏற்படுவதுடன் , முக்கிய தகவல்களை மாவட்ட ஆட்சியர் தேனி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை, மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், தமிழக அரசு தலைமை செயலகம் சென்னை போன்ற அலவலகங்களுக்கு மின்னஞ்சல் செய்வதில் மிகவும் சிரமம் ஏற்படுகிறது. எனவே அலுவலக கணினிகள் மின் தடையின்றி செயல்பட வசதியாக 5 கே.வி.ஏ. தடையில்லா மின் வழங்கிக்கு 12 வோல்ட் 150 ஆம்ஸ் திறனில் 10 மின்கலப்பெட்டியும், 3 கே.வி.ஏ. தடையில்லா மின் வழங்கிக்கு 12 வோல்ட் 150 ஆம்ஸ் திறனில் 6 மின்கலப்பெட்டியும், மொத்தம் 16 மின்கலப்பெட்டிகள் வாங்கி பொருத்த தயார் செய்த மதிப்பீட்டு தொகை ரூபாய் ரூ.2.60 இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சத்தி அறுபதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு– 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதி 2022–2023 ன் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.637/2022/இ2)

**9.** இந்நகராட்சியில் வார்டு எண் 3, சங்கிலி நகர் கிழக்கு 3 வது குறுக்கு தெருவில் குடியிருப்பு விரிவாக்க பகுதி என்பதால் குடியிருப்புகளுக்கு வீட்டு குடிநீர் குழாய் இணைப்பு வழங்க பகிர்மான குழாய் இல்லாததால் வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்க இயலாத நிலை உள்ளது.

எனவே மேற்படி பகுதியில் பொது மக்களுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கும் பொருட்டு வார்டு எண் 3 ல் 120 மீ, 90mm PVC பகிர்மான குழாய் அமைக்க உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.50,000 /–குடிநீர் நிதி 2022–2023– ன் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு– 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதி 2022–2023 ன் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.625 /2022/இ2)

**10.** இந்நகராட்சியில் வார்டு எண் 32, நந்தகோபால் சாமி நகரில் குடியிருப்பு விரிவாக்க பகுதி என்பதால் குடியிருப்புகளுக்கு வீட்டு குடிநீர் குழாய் இணைப்பு வழங்க பகிர்மான குழாய் இல்லாததால் வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்க இயலாத நிலை உள்ளது.

எனவே மேற்படி பகுதியில் பொது மக்களுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கும் பொருட்டு வார்டு எண் 32 ல் 150 மீ, 90mm PVC பகிர்மான குழாய் அமைக்க உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.70,000 /–குடிநீர் நிதி 2022–2023– ன் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு– 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதி 2022–2023 ன் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 624/2022/இ2)

**11.** இந்நகராட்சியில் நீண்ட காலமாக நிலவி வந்த பொது மக்களின் குடிநீர் பற்றாக்குறையை போக்க நகராட்சிக்கென தனி கூடுதல் குடிநீர் திட்டம் சுருளிப்பட்டி ரோடு முல்லையாற்றில் உறைகிணறு அமைத்து 23.09.2014 முதல் நகர மக்களுக்கு குடிநீர் குறைவின்றி பம்பிங் செய்யப்பட்டு வருகிறது.மேற்படி குடிநீர் திட்டத்தில் உள்ள 8 மின் விசை மோட்டார்களை உரிய தொழில் நுட்ப பணியாளர்களை கொண்டு இயக்குதல் பணிகளை செய்திட 2021–2022ம் ஆண்டிற்கான வருடாந்திட ஒப்பந்த பணிக்காலம் 31.03.2022ல் முடியும் நிலையில் தற்போது குடிநீர் அத்தியாவசிய பணிகளுக்கான பணியாளர்கள் வெளிக்கொணர்வு முகமை மூலம் கொண்டு வருவதற்கான உரிய கருத்துரு சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் கோரப்பட்டு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், இதற்கான உரிய வழிகாட்டுதல் மற்றும் அனுமதி வரும்வரை குடிநீர் வழங்கு பணிகளில் தொய்வு ஏற்படாதவகையிலும், ஏற்கனவே வழங்கப்பட்ட அனுமதியின் படி, தற்போதைய ஒப்பந்ததாரர் திரு. எல். இராஜேந்திரன் என்பவர் தொடர்ந்து 1 மாதகாலத்திற்கு 01.04.2022 முதல் 30.04.2022 வரை பணிகள் மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ஜி.எஸ்.டி வரிகள் உட்பட ரூ. 77000/– க்கு (ரூபாய் எழுபத்தி ஏழாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக்குறிப்பு– | 1) மன்றம் அனுமதிக்கலாம்,<br>2) மேற்படி செலவினத்தை குடிநீர் நிதி 2022–2023–ன் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 1136/2022/இ2) |

**12.** இந்நகராட்சி லோயர் கேம்ப் குடிநீர் திட்டம் ரூ18.80 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணிகள் செயல்படுத்தி பணிகள் முடித்து நகராட்சி வசம் 17.04.2020ம் தேதி முதல் ஒப்படைப்பு செய்யப்பட்டது. மேற்படி திட்டத்தை நகராட்சி மூலம் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாததால்,வருடாந்திர ஒப்பந்த அடிப்படையில் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்திட ரூ44.00 இலட்சம் மதிப்பீட்டில் உரிய மன்ற அனுமதி மற்றும் நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் குறிப்பிட்டுள்ள எல்.ராஜேந்திரன் என்பவருக்கு இவ்வலுவலக ந.க. எண் 1136/2020/இ2 நாள் 01.12.2020ம் தேதியிட்ட செயல் முறை ஆணையில் 01.12.2020 முதல் 30.11.2021 முடிய லோயர் கேம்ப் குடிநீர் திட்டத்தை இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்திட அனுமதித்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் அவர்களின் கடிதம் ந.க எண் 29156/2019/DO2/நாள் 22.10.2020ம் தேதிய கடிதத்தில் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகள் செய்திட ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரரின் செயல்பாடுகளில் குறைபாடுகள் ஏதுமில்லாத நிலையில் தொடர்ந்து நீட்டித்து கொள்ளலாம் என அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தற்போது குடிநீர் அத்தியாவசிய பணிகளுக்கான பணியாளர்கள் வெளிக்கொணர்வு முகமை மூலம் கொண்டு வருவதற்கான உரிய கருத்துரு சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் கோரப்பட்டு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், இதற்கான உரிய வழிகாட்டுதல் மற்றும் அனுமதி வரும்வரை குடிநீர் வழங்கு பணிகளில் தொய்வு ஏற்படாதவகையிலும், ஏற்கனவே வழங்கப்பட்ட அனுமதியின் படி, தற்போதைய ஒப்பந்ததாரர் திரு. எல். இராஜேந்திரன் என்பவர் தொடர்ந்து 1 மாதகாலத்திற்கு 01.04.2022 முதல் 30.04.2022 வரை பணிகள் மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ. 4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக்குறிப்பு– | 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி செலவினத்தை குடிநீர் நிதி 2022–2023–ன் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1136 /2022/இ2) |

**13.** தேனி, மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 4041/2021/தி6 நாள் 10.01.2022ன்படி, கம்பம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2021–22ன்கீழ், கம்பம் நகராட்சிக்குச் சொந்தமான முகைதீன் ஆண்டவர்புரம் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் புதிதாக இரண்டு ஆய்வுக்கூடம் கட்டும் பணிகள் செய்திட அனுமதிக்கப்பட்டதன்படி, 23.03.2022 அன்று மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர்பெயர் | மதிப்பீட்டிற்கான சதவீதம் |
|---|---|---|
| 1. | திருவாளர்கள் ஏ.பி.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்,<br>ஒப்பந்ததாரர், கம்பம் | 0.01% மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திரு ஆர்.சபீர் அலி,<br>ஒப்பந்ததாரர்,<br>கம்பம். | 1.12% மதிப்பீட்டை விட அதிகம் |

| | |
|---|---|
| அலுவலகக்குறிப்பு:- | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.01 சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திருவாளர்கள் ஏ.பி.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 013/2022/இ1) |

**14.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 22 வார்டுகளில் துப்புரவு பணி மேற்கொள்வதற்கு 107 பணியாளர்களை வழங்கி வரும் M/s UK security Service, Chennai என்ற நிறுவனத்திற்கு இவ்வலுவலக உத்தரவு ந.க.எண். 3767/2019/ எச்1 நாள் 29.05.2020 –இல் பணி உத்தரவு வழங்கப்பட்டு 01.06.2020 முதல் பணியை துவங்கி பணி செய்து கடந்த 28.02.2021 உடன் ஒப்பந்தம் முடிவடைந்து சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநரது அறிவுரையின்படி, திடக்கழிவு மேலாண்மை பணி மேற்கொள்ள தேவையான நபர்களுக்கான அளவுகோல் நிர்ணயம் செய்ய முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டு நிர்வாக அனுமதி எதிர்பார்க்கப்படும் நிலையிலும் , தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்த காரணத்தினால் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு இறுதி செய்வதற்கு சிறிது காலமாகுமென்பதாலும், பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது M/s UK security Service, Chennai நிறுவனத்துடன் 31.03.2022 முடிய ஒப்பந்தம் நீட்டிப்பு செய்து வழங்கப்பட்டுள்ளது. தற்போது வரை சென்னை,நகராட்சி நிர்வாக இயக்குநரது நிர்வாக அனுமதி பெறப்படததாலும், பொது சுகாதார நலன் கருதி 01.04.2022 முதல் 30.04.2022 வரை கால நீடிப்பு செய்து வழங்காலம். ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலை விகிதத்தில் பணி உத்தரவு வழங்குவதற்கும், உத்தேச செலவினத்தொகை ரூ.15.00 இலட்சத்திற்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு :- | பொது சுகாதார நலன் கருதி துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது துப்புரவு பணியாளர்களை வழங்கி வரும் M/s UK security Service, Chennai நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தை 01.04.2022 முதல் 30.04.2022 வரையில் கால நீடிப்பு செய்யவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண்.3767/2019/எச்1) |

| | |
|---|---|
| **15.** | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 11 வார்டுகளில் துப்புரவு பணி மேற்கொள்வதற்கு 76 பணியாளர்களை வழங்கி வரும் M/s Relyon Facility Service Pvt Ltd என்ற நிறுவனத்திற்கு இவ்வலுவலக உத்தரவு ந.க.எண். 4468/2018/ எச்1 நாள் 27.02.2020 –இல் பணி உத்தரவு வழங்கப்பட்டு 29.02.2020 முதல் பணியை துவங்கி பணி செய்து கடந்த 28.02.2021 உடன் ஒப்பந்தம் முடிவடைந்து, முடிவடைந்து சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநரது அறிவுரையின்படி, திடக்கழிவு மேலாண்மை பணி மேற்கொள்ள தேவையான நபர்களுக்கான அளவுகோல் நிர்ணயம் செய்ய முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டு நிர்வாக அனுமதி எதிர்பார்க்கப்படும் நிலையிலும் , தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்த காரணத்தினால் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு இறுதி செய்வதற்கு சிறிது காலமாகுமென்பதாலும், பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது M/s Relyon Facility Service Pvt Ltd, Chennai நிறுவனத்துடன் 31.03.2022 முடிய ஒப்பந்தம் நீட்டிப்பு செய்து வழங்கப்பட்டுள்ளது. தற்போது வரை சென்னை,நகராட்சி நிர்வாக இயக்குநரது நிர்வாக அனுமதி பெறப்படததாலும், பொது சுகாதார நலன் கருதி 01.04.2022 முதல் 30.04.2022 வரை கால நீடிப்பு செய்து வழங்காலம். ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலை விகிதத்தில் பணி உத்தரவு வழங்குவதற்கும், உத்தேச செலவினத்தொகை ரூ.10.00 இலட்சத்திற்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக் குறிப்பு :- பொது சுகாதார நலன் கருதி துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது துப்புரவு பணியாளர்களை வழங்கி வரும் M/s Relyon Facility Service Pvt Ltd நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தை 01.04.2022 முதல் 30.04.2022 வரையில் கால நீடிப்பு செய்யவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண்.4468/2018/எச்1) |
| **16.** | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளில் கொசுப்புழு உற்பத்தியாவதை தடுக்கும் பணிக்கு 63 பணியாளர்களை வழங்கி வரும் M/s Relyon Facility Service Pvt Ltd என்ற நிறுவனத்திற்கு இவ்வலுவலக உத்தரவு ந.க.எண். 3963/2018/எச்1 நாள்.27.02.2020 –இல் பணி உத்தரவு வழங்கப்பட்டு 29.02.2020 முதல் பணியை துவங்கி பணி செய்து கடந்த 28.02.2021 உடன் ஒப்பந்தம் முடிவடைந்து சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநரது அறிவுரையின்படி, திடக்கழிவு மேலாண்மை பணி மேற்கொள்ள தேவையான நபர்களுக்கான அளவுகோல் நிர்ணயம் செய்ய முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டு நிர்வாக அனுமதி எதிர்பார்க்கப்படும் நிலையிலும் , தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்த காரணத்தினால் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு இறுதி செய்வதற்கு சிறிது காலமாகுமென்பதாலும், பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது M/s Relyon Facility Service Pvt Ltd, Chennai நிறுவனத்துடன் 31.03.2022 முடிய ஒப்பந்தம் நீட்டிப்பு செய்து வழங்கப்பட்டுள்ளது. தற்போது வரை சென்னை,நகராட்சி நிர்வாக இயக்குநரது நிர்வாக அனுமதி பெறப்படததாலும், பொது சுகாதார நலன் கருதி 01.04.2022 முதல் 30.04.2022 வரை கால நீடிப்பு செய்து வழங்காலம். ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலை விகிதத்தில் பணி உத்தரவு வழங்குவதற்கும், உத்தேச செலவினத்தொகை ரூ.6.00 இலட்சத்திற்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு பொது சுகாதார நலன் கருதி பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது பணியாளர்களை வழங்கி வரும் M/s Relyon Facility Service Pvt Ltd நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தை 01.04.2022 முதல் 30.04.2022 வரையில் கால நீடிப்பு செய்யவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண்.3963/2018/எச்1) |
| **17.** | இந்நகர்மன்ற தீர்மான எண்.2457 நாள்.24.01.2022–ல் அனுமதிக்கப்பட்டுள்ளபடி, கம்பம் நகராட்சி பகுதியில் உள்ள அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிப்பிடங்களை (7 நகராட்சி பள்ளிகள் 4 அரசு பள்ளிகள்) சுத்தம் மற்றும் வளாக பகுதிகள் தூய்மைப்படுத்துதல் போன்ற பணிகள் SUN (TAMIL NADU) SECURITY Management Services Private Ltd நிறுவனத்ினருக்கு 01.02.2022 முதல் 31.03.2022 வரை இரண்டு மாதத்திற்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலை விகிதத்தில் பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கப்பட்டது. தற்போது துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது மதுரை SUN (TAMIL NADU) SECURITY Management Services Private Ltd நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு 01.04.2022 முதல் 30.04.2022 வரை ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலை விகிதத்தில் பணி உத்தரவு வழங்குவதற்கும் தொடர்ந்து நீட்டிப்பிலேயே பணி செய்து வருவதால், தேனி, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் 2021–2022 ஆம் ஆண்டு விலை விகிதத்திற்கேற்ப புதிதாக விலை நிர்ணயம் செய்து ஓராண்டுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 15.00 (ரூபாய் பதினைந்து இலட்சம்) இலட்சத்திற்கு மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது |
| | அலுவலகக்குறிப்பு: 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) நிர்வாக நலன் கருதியும் பொது சுகாதார நலன் கருதியும் துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது துப்புரவு பணியாளர்களை வழங்கி வரும் மதுரை SUN (TAMIL NADU) SECURITY Management Services Private Ltd நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு (01.04.2022 முதல் 30.04.2022 வரை) நீட்டிப்பு செய்தும், புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேறகொள்ளவும், அதற்கான செலவினத்தினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண். 3398 / 2016 / எச்1) |
| **18.** | கம்பம் நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் கழிவுநீர் கால்வாய் சுத்தம் செய்ய வேண்டியு.ள்தால், தூய்மை பணியாளர்கள் மூலம் குறுகலான கழிவுநீர்கால்வாய் தொடர்ந்து தினந்தோறும் சிறப்பு தூய்மை பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பெரிய கால்வாய்களை JCB மூலம் தூர்வாரி சுத்தம் செய்வதற்கு சிறிய JCB பக்கெட் இல்லாததால் புதிதாக JCB சிறிய Bucket வாங்கி வழங்கவும், அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.25,000/–ஐ (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு: 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)பொது சுகாதார நலன் கருதியும், அவசர அவசியம் கருதியும், மேற்காணும் JCB சிறிய Bucket வாங்குவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் , அதற்காகும் உத்தேச செலவினத்தை தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 572 /2022/எச்1) |

**19.** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் உள்ள கீழ்கண்ட வாகனங்களுக்கு 01.04.2022 முதல் 31.03.2023 வரையிலான ஓராண்டு காலத்திற்குரிய சாலைவரி, பசுமைவரி மற்றும் ஆன்லைன் கட்டணம் செலுத்த ஆகும் செலவினம் ரூ.34,203/–(ரூபாய் 5முப்பத்தி நான்காயிரத்து இருநூற்று மூன்று மட்டும் )–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வாகனங்கள் விபரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | TN.60.T 4504 | 4555.00 |
| 2 | TN.60.T 4507 | 4555.00 |
| 3 | TN.60.T 4524 | 4555.00 |
| 4 | TN.60.Z 3591 | 3598.00 |
| 5 | TN.60.Y 1959 | 3040.00 |
| 6 | TN 60 AU 9643 | 13500.00 |
| | Online Service Charge | 400.00 |
| | | 34203.00 |

அலுவலகக்குறிப்பு:

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொது சுகாதார நலன் கருதியும், அவசர அவசியம் கருதியும் தொகை வழங்குவதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்: 551/2022/எச்1 )

**20.** இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் கொசு ஒழிப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் Vechile Mounted Fogging Machine வாகனத்தில் பொருத்தி பயன்படுத்தக்கூடிய பெரிய புகை மருந்து அடிக்கும் இயந்திரம் பழுதாகிவிட்டது. எனவே மேற்படி பழுதினை சரி செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.50,000/–க்கு(ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி, உள்ளூர் மற்றும் வெளியியூர் நிறுவனங்களில ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.50,000/–க்கு (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மன்ற அனுமதிக்கும், மேற்படி செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 572 /2022/எச்1)

**21.** கம்பம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–19–ன் கீழ் முதல்நிலை குப்பை சேகரம் செய்யும் பணிக்கு 31 எண்ணிக்கையிலான பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் (Battery Operated Vehicle ) வாங்கப்பட்டு பொது சுகாதாரப்பிரிவில் பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்படி வாகனங்களில் அவ்வப்பொழுது ஏற்படும் சிறு சிறு பழுதுப்பணிகளை சரிசெய்து, பயன்பாட்டில் தொடர்ந்து இருக்கும் வகையில் தனியார் நிறுவனம் மூலம் மேற்காணும் வாகனங்களை ஆண்டு பராமரிப்பு பணியினை மேற்கொள்வதற்கும் ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.7.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.583 /2022/எச்1)

**22.** திடக்கழிவு மேலாண்மை பணிகளில் முதல்நிலை சேகரிக்கும் பணிக்கு தேவையான BOV வாகனங்கள் 16 எண்ணம் பேட்டரிகள் முழுமையாக செயல் இழந்து பழுதடைந்து இயக்க முடியாத நிலையில் உள்ளது. மேற்காணும் வாகனங்களை முழுமையாக செயல்பாட்டுக்கு கொண்டு வரும் போது Source Segregation தடைபடாமல் செய்து முதல்நிலை சேகரம் செய்வதற்கு ஏதுவாக பழுதாகியுள்ள 16 எண்ணம் BOV வாகனங்களை பழுதுநீக்கம் செய்யவும் அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.12.00 இலட்சம் (ரூபாய் பன்னிரண்டு இலட்சம் மட்டும்) மன்ற அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொது சுகாதார நலன் கருதியும், அவசர அவசியத்தை முன்னிட்டு மேற்காணும் வாகனங்களை பழுது பணி செய்வதற்கு உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களில் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.12,00,000/–க்கு (ரூபாய் பன்னிரண்டு இலட்சம் மட்டும்) மன்றம் அனுமதிக்கும், மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 571 /2022/எச்1)

**23.** இந்நகராட்சியில் கீழ்கண்ட பணிகள் செய்திட 23.3.2022ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒவ்வொரு பணிக்களுக்கும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வீதம் வரப்பட்டுள்ளதை மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூபாய் இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டைவிட சதவீதம் குறைவு | மதிப்பீட்டைவிட சதவீதம் கூடுதல் |
|---|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சி வார்டு 25 நந்தகோபால் சாமி மேல்நிலைநீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் 15வது நிதிக்குழு திட்டம் 2020–2021ன்கீழ் புதிதாக கட்டப்பட்ட 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட மேல் நிலைநீர்தேக்க தொட்டிக்கு நீரேற்றம் செய்யும் பொருட்டு உள்ளினைப்பு பணிகள் செய்தல். (PIPE INTER LINK CONNECTION WORK) | 8,00,000 | எல்.ராஜேந்திரன், கம்பம். | 0.10 | |
| | | | வி.கிருஷ்ணன், கம்பம். | | 0.08 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2. | இந்நகராட்சி வார்டு 31 மணிநகர் மேல்நிலைநீர்த்தேக்க தொட்டியில் நீர் வெளியேறும் குழாயின் அளவு (OUT LET)100mm ஆக உள்ளதை 150 mm ஆக மாற்றி அமைக்கும் பணிகள் செய்தல். | 3,50,000 | எல்.ராஜேந்திரன், கம்பம். | 0.13 | |
| | | | வி.கிருஷ்ணன், கம்பம். | | 2.04 |
| 3 | வார்டு 1, சுவாமி விவேகானந்தர் தெரு வடமேற்கு பகுதியான கண்ணுடையார் நகரில் பகிர்மான குழாய் பதித்தல். பணிகள் மேற்கொள்தல் | 4,60,000 | எல்.ராஜேந்திரன், கம்பம். | 0.16 | |
| | | | வி.கிருஷ்ணன், கம்பம். | | 1.10 |
| 4 | வார்டு 27, பொதுப்பணித்துறை அலுவலகம் முன்பு மற்றும் வார்டு10 தாத்தப்பன் குளம் 2 வது சந்து மற்றும் 4வது சந்து பகிர்மான குழாய் பதித்தல் பணிகள் மேற்கொள்தல். | 1,10,000 | எல்.ராஜேந்திரன், கம்பம். | 0.51 | |
| | | | வி.கிருஷ்ணன், கம்பம். | | 0.58 |
| 5 | வார்டு 25, நந்தகோபால் சாமி கோவில் முன்பு, வார்டு 15ஓடைக்கரை தெரு சுப்பர் ஸ்டோர் அருகில்,ஓடைகரை தெரு மற்றும் சுங்கம்தெருசந்திப்பு மற்றும் நாட்டாண்மை நாராயணன்தெரு சந்திப்பு ஆகிய இடங்களில் சுலீஸ் வால்வுகள் புதிதாக பொருத்தும் பணிகள் மேற்கொள்தல் | 1,90,000 | எல்.ராஜேந்திரன், கம்பம். | 0.14 | |
| | | | வி.கிருஷ்ணன், கம்பம். | | 0.31 |
| 6 | வார்டு 31, காந்தி நகர்தொட்டி வளாகம், காந்தி நகர்தொட்டி வளாகம் வெளிப்புறம், காந்தி நகர் மற்றும் எல் எப் ரோடு சந்திப்பு, வார்டு 22குலாளர் தெரு மற்றும் வார்டு 24 KVR தெரு ஆகிய இடங்களில் சுலீஸ் வால்வுகள் புதிதாக பொருத்தும் பணிகள் | 1,60,000 | எல்.ராஜேந்திரன், கம்பம். | 0.05 | |
| | | | வி.கிருஷ்ணன், கம்பம். | | 0.49 |

**அலுவலகக் குறிப்பு–** வரப்பட்ட 6 பணிகளுக்கான இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட, விலை விகிதம் குறைவாக கொடுத்துள்ள திரு எல். ராஜேந்திரன், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 626 /2022/இ2)

**24** இந்நகராட்சி வார்டு எண் 1 முதல் 33 வரை பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படும் குடிநீரை ஒவ்வொரு மேல்நிலை நீர்தேக்க தொட்டியில் சேகரமாகும் குடிநீர் மாதரி எடுத்து மாதம் தோறும் தேனி மாவட்ட குடிநீர் பரிசோதனை மையம், சென்று பரிசோதனைகள் செய்து சான்று பெறுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/–க்கு (ரூபாய் ஐம்பது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு–** 1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கான செலவினத்தினை 2022–2023ஆம் ஆண்டு குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 635 /2022/இ2)

**25** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 33 வரை உள்ள வார்டுகளில் குடியிருப்பு மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்க குடிநீர் துணை விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நடைமுறை விதிகளின்படி 5 சதவீதம் உயர்வு செய்து 2022–2023ம் ஆண்டிற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள சாலை சேதாரக் கட்டணத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | நீளம் | ஜல்லி | | தார்சாலை | | சிமெண்ட்சாலை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2021–22 | 2022–23 | 2021–22 | 2022–23 | 2021–22 | 2022–23 |
| 1 | 0 முதல் 30 மீ வரை | ரூ.1917/– | ரூ.2013/– | ரூ. 4069/– | ரூ. 4273/– | ரூ.4691/– | ரூ.4926/– |
| 2 | 30 முதல் 90 மீ வரை | ரூ. 3003/– | ரூ. 3153/– | ரூ. 5140/– | ரூ. 5397/– | ரூ. 5757/– | ரூ.6045/– |

**அலுவலககுறிப்பு–** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 634 /2022/இ2)

**நாள். 28.03.2022**
**இடம். கம்பம் நகராட்சி**

**நகர்மன்றத்தலைவர்,**
**கம்பம் நகர்மன்றம்,கம்பம்.**